**நேர்காணல்**

*ஏ. எம். சண்முகம் (சுவடி வாசிப்பவர்), பட்டுக்கோட்டை.*
*சௌந்திரராஜன் (சுவடி வாசிப்பவர்), அரும்பாக்கம், சென்னை.*
*அகஸ்தீஸ்வரன் (சுவடி வாசிப்பவர்), திருவான்மியூர், சென்னை.*
*நல்லதம்பி (ஆன்மீக வழிகாட்டி), ராசிபுரம்.*
*கோவைமணி (முனைவர்), ஓலைச்சுவடித்துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
*ஜெயபாலன் (முனைவர்), அகத்திய ஆசிரமம், சென்னை.*
*ரமணி (சுவடி வாசிப்பவர்), தாம்பரம், சென்னை.*
*வைதீஸ்வரன் கோவில் (ராமலிங்கம், முரளி, ஜெயந்தன், வாசு, கணேசன், பெருமாள்)*
*சரஸ்வதி மஹால், தஞ்சாவூர், (பெருமாள், சொக்கலிங்கம், ஈஸ்வரன், வரதராசு, கோவிந்தன்)*
*சுப்ரமணிய சுவாமிகள், பூண்டி மஹான் ஆசிரமம், பூண்டி.*
*மாணிக்கம் அய்யா, கொல்லிமலை.*

**சைவத்திருமுறையில் திருவிசைப்பா: ஓர் அறிமுகம்**

*இரா. சீதாலெட்சுமி*
*இந்திய ஆய்வியல் துறை, மலாயாப் பல்கலைக்கழகம்*

**முன்னுரை**

*மனிதக் குலத்தைப் பண்படுத்துவது சமயம். சமயம், மதம், நெறி, மார்க்கம் என்பன 'வழி' என்ற ஒரு பொருள் குறித்த பல சொற்களாகும். 'சமயம்' என்பதற்கு, இறைவனோடு ஒன்றுபடுத்துவதற்கு அல்லது மீண்டும் பிணைப்பதற்குரிய வழி எனப் பொருள்படும். (1) மனித இனம் அறிவுத்திறம் பெறத் தொடங்கிய காலத்திலிருந்தே சமயமும் உடன் வளர்ந்து வந்ததாகத் தோன்றுகிறது. சமயத் தேவை மனிதனது இயற்கைத் தேவைகளுள் ஒன்று என்பதுடன் இத்தேவை நிறைவு செய்யப்படுவது மனநிறைவினைத் தருவதாகவும் அமைகிறது.*

*தொல்காப்பியர் காலத்திலும் அவர் காலத்திற்கு முன்னும்கூட மக்கள் மனதில் சமய உணர்வு காணப்பெற்றிருந்தது எனத் தெளியலாம். (2) இயற்கையோடு இயைந்து வாழ்ந்த சங்க காலத் தமிழ் மக்களின் வாழ்க்கையோடு சமயம் ஒருங்கிணைந்த நிலையைச் சங்க இலக்கியங்கள் மிகத் தெளிவாக எடுத்துணர்த்துகின்றன. பண்டைய தமிழர் கடவுளை எண்ணியே அகப்புற வாழ்வினை மேற்கொண்டதாக இவ்விலக்கியங்கள் சான்று பகர்கின்றன. (3) சங்கம் மருவிய காலத்தில் தமிழ் மக்களிடையே சமய நம்பிக்கை தொடர்ந்து இருந்து வந்துள்ளது என்பதற்குத் தக்கச் சான்றாகவும் அக்காலப் பகுதியில் தோன்றிய இலக்கியங்களிலுள்ள குறிப்புகள் திகழ்கின்றன.*

*சங்க காலத்தில் மூவேந்தராலும் சிற்றரசர்களும் ஆளப்பட்டு வந்த தமிழ்நாடு, கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் அயலவர்களான களப்பிரர் பல்லவர் முதலானோர் ஆட்சிக்குட்பட்டது. புறச்சமயத்தினரான களப்பிரர் தமிழ்நாட்டின் பழஞ்சமயங்களான சைவ, வைணவ சமயங்களுக்கு ஆதரவு அளிக்கவில்லை; பௌத்த, சமண சமயங்களின் செல்வாக்கே இக்காலப்பகுதியில் மிகுந்திருந்தது.4 ஆயினும், ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் களப்பிரர்கள் தம் அரசியல் செல்வாக்கை இழந்தனர். தெற்கே, நின்ற சீர் நெடுமாறன் என்ற பாண்டிய மன்னன் களப்பிரர்களை வென்று நாட்டைக் கைப்பற்றினான். வடக்கே, பல்லவர்கள் ஆட்சி செல்வாக்குப் பெற்று நல்லதோர் ஆட்சியை நிலைநாட்டினர். இவர்கள் காலத்தில் சைவ, வைணவச் சமயங்கள் புத்துயிர் பெறத் தொடங்கின. (5)*

*தொடர்ந்து, கி.பி. 6, 7, 8-ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்தில் சைவ, வைணவ சமயப் பெரியார்களான நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றினர்; ஊர் ஊராகச் சென்று பக்திப்பாடல்கள் பாடி, தத்தம் சமயக் கொள்கைகளைப் பரப்பினர். தமிழ் மக்களிடையே சமய எழுச்சியும் கலைப் பாதுகாப்பும் தோன்றலாயின. அதன் விளைவாக, தமிழர் தம் பண்பாட்டினையும் கலைச்செல்வங்களையும் பேணிக் காக்கும் பெருநோக்கில் பக்தி இயக்கம் உருபெற்றது.6 பக்தி இயக்கத்தின் விளைவாகத் திருமுறைகள் தோன்றின. நாயன்மார்களும் ஆழ்வார்களும் சமய உணர்வுகொண்டு பாடிய இசைப்பனுவல்களே சைவத்திருமுறை பன்னிரெண்டாகவும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமாகவும் அழைக்கப்பெற்றன. (7)*

**ஆய்வின் நோக்கம்**

*இந்த ஆய்வுக்கட்டுரை பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அமைகின்றது:*

*(அ)* *பக்தி இயக்க உருவாக்கத்தின் விளைவாக தோன்றிய சைவத்திருமுறைகள் பன்னிரெண்டின் உள்ளடக்கத்தினைப் பொதுவாக விவரித்தல்;*

*(ஆ)* *ஒன்பதாம் திருமுறையான திருவிசைப்பாவின் காலம், ஆசிரியர், பாடல் தொகுப்பு, பண்கள், தலங்கள் முதலான கூறுகளைத் தொகுத்தளித்தல்.*

***ஆய்வின் வரையறை***

*இந்த ஆய்வுக்கட்டுரையில் பக்தி இயக்க உருவாக்கம், சைவ சமயத்தில் திருமுறை விளக்கம், திருமுறை கண்ட வரலாறு, பன்னிரு திருமுறைகள், திருமுறையில் திருவிசைப்பா, அதன் சொற்பொருள் விளக்கம், காலம், தொகுப்புமுறை, ஆசிரியரும் பாடல்தொகுப்பும், பண்களும் தலங்களும் குறித்த பொதுவான செய்திகள் ஆய்வின் வரையறையாகக் கொள்ளப்படுகின்றன.*

***பக்தி இயக்கமும் சைவ சமயமும்***

*மனித வாழ்வைத் தூய்மைப்படுத்துவதற்கும் மேன்மைப்படுத்துவதற்கும் தோன்றிய இயக்கங்களுள் ஒன்றே பக்தி இயக்கம். இவ்வியக்கத்தைப் பரப்பி வளர்க்கும் பொருட்டு வேறுபட்ட கொள்கைகளுடன் வெவ்வேறு சமயங்கள் தோன்றின. அவ்வாறு பக்தி இயக்கத்தை வளர்த்து வருகின்ற தொன்மைச் சமயமே சைவசமயம். தமிழகத்தில் பக்தி இயக்கத்தை வளமாகவும் செழுமையாகவும் வளர்த்து வெற்றி கண்ட பெருமை சைவ சமயத்திற்கே உண்டு. பக்தி கொண்ட வாழ்க்கை தூயது; இனிமைநலம் மிக்கது. இத்தகு பக்தி வாழ்வு சமுதாயத்தில் நிகழும் பொருட்டே சமயக்குரவர் நால்வரும் ஏனைய சைவநெறிச் சான்றோரும் ஊர்தோறும் தலந்தோறும் சென்று இறைவனைப் போற்றிப் பாடி, பக்தி இயக்கத்தைப் பரப்பி வளர்த்து வந்தனர். (8)*

*சைவ சமயம் என்பது 'சைவம்', 'சமயம்' என்னும் இரு சொற்களால் ஆனது. 'சைவம்' என்பது சிவ சம்பந்தம் எனப் பொருள்படும்; 'சமயம்' என்பது வழி; சிவத்தோடு சம்பந்தப்படுதற்குரிய வழியே சைவ சமயமாகும். சிவத்தை அடையும் வழி என்றும் கூறலாம். 'சிவநெறி' என்ற சொற்றொடரும் இப்பொருளுடையது. 'சிவம்' என்னும் சொல் செம்மை என்னும் பண்பின் அடியாகப் பிறந்து மங்கலம், இன்பம், தூய்மை, நன்மை என்று பொருள்படும். (9)*

*கடவுளை, 'சிவம்' என்ற சொல்லால் சைவர்கள் அழைத்ததற்குத் தக்கக் காரணம் கூறப்படுகிறது. பொதுவாக, பிரமன், விஷ்ணு, இறைவன், கடவுள் எனும் சொற்கள் பரம்பொருளைச் சுட்டுவனவாக வழக்கில் உள்ளன. இவற்றுள், பிரமன்: பெரியவர்; விஷ்ணு: வியாபித்திருப்பவர்; இறைவன்: எங்கும் தங்குபவர்; கடவுள்: மனமொழி மெய்களைக் கடந்துள்ளவர்; என்ற பொருள் பொதிந்துள்ளது. எல்லாவற்றையும் கடந்த பொருளாயினும், இறைவன் உயிர்களுக்குப் பிறவித்துன்பத்தை நீக்கி என்றும் நிலைத்த பேரின்பத்தைக் கொடுப்பான் எனும் கருத்து 'சிவம்' என்ற சொல்லில் வெளிப்படுவதாலும், எல்லா உயிர்களும் அத்தகு இன்பத்தையே நாடுவதாலும் அவ்வின்பத்தைக் கொடுக்கும் முதல்வனை அவ்வாறு சைவர்கள் அழைத்தனர் எனக் கருத்துரைக்கப்படுகின்றது. (10)*

*நாடு நலம் பெற்று வாழ வழி காட்டுவதே சிவநெறி. இந்நெறிக்கு முழுமுதற்கடவுள் சிவன். எல்லாப் பொருள்களையும் கடந்த நிலையிலும் எல்லாப் பொருள்களிலும் ஊடுருவியும் நிற்கும் பரம்பொருளையே 'சிவன்' எனக் கூறினாலும், அப்பரம்பொருள் நம்மோடு தொடர்புகொள்ள எடுத்துக்கொண்ட திருகோலமும் அத்திருக்கோலத்தைக் குறிக்கும் திருநாமமும் இங்குப் பரம்பொருளைச் 'சிவன்' எனக் குறிப்பதற்குக் காரணமாகும்; இத்திருக்கோலத்தின் வாயிலாகவும் இத்திருநாமத்தின் வாயிலாகவும் பரம்பொருளோடு தொடர்பு கொண்டு வாழ்தலே 'சைவம்' எனப்பட்டது என்று ப.அருணாசலம் தமது நூலில் சுட்டியிருப்பது இவ்விடம் குறிப்பிடத்தக்கது. (11)*

***சைவ சமயத்தில் திருமுறைகள்***

*சைவ சமய அருளாளர் பெருமக்கள் பாடியருளிய சைவ இலக்கியங்கள் தோத்திரம் (இறைவன் புகழைப் பரவுதல்) எனவும், சாத்திரம் (தத்துவ விளக்கங்கள்) எனவும் இருவகையாகப் பகுக்கப்படும். (12) பல்வேறு காலப்பகுதியில் வாழ்ந்த சைவ சமய அடியாரது பாடல் தொகுதிகளே தோத்திரங்கள். இவற்றின் பொதுப் பெயர் 'திருமுறை' என்பதாகும். இத்திருமுறைகள் பன்னிரண்டு ஆகும். (13)*

***திருமுறை: சொற்பொருள் விளக்கம்***

*திருமுறை என்பது இறைவழி எழும் உணர்வினை ஊட்டும் திருத்தொடராகும். 'திரு' எனும் சொல் அருள் மணக்கும் உயர்தனி மங்கலத் தமிழ்சொல்லாகும். 'முறை' எனும் சொல் முறைமை, முறையீடு, மரபு, ஒழுங்கு, ஒழுக்கம், அமைவு, தரம், குணம் ஆகிய பொருள்களைக் குறிக்கும்; 'திருமுறை' என்பது இப்பொருள்கள் எல்லாவற்றையும் தழுவிய நூல் எனும் கருத்தில் வழங்கப்பெற்று வருகிறது. (14)*

*'முறை' என்ற சொல் உறவு, ஒழுக்கம் இடைச்சொல், ஒழுங்கு, கிரமம், குணம், தரம், பழமை, புத்தகம், முறைமை, முறையீடு, வரிசை எனப் பன்னிரண்டு பொருள்களைக் கொண்டுள்ளதாக அடங்கன் முறை ஆராய்ச்சிக் கட்டுரையில் விளக்கப்படுகின்றது. (15) 'முறை' என்ற சொல் நூல், பழமை, ஊழ், கூட்டு, கட்டு, முறைமை எனப் பல பொருள்களில் வழங்கப்பெற்றாலும், திருமுறை எனும் தொடரிலுள்ள 'முறை' என்பது நூலையும் அதன் உட்பிரிவுகளையும் குறித்து வழங்குவதாகக் க.வெள்ளைவாரணன், பன்னிரு திருமுறை வரலாறு எனும் தமது நூலில் கருத்துரைக்கின்றார். அதாவது, மக்கள் அறியவேண்டிய பொருள்களை அறிவுறுத்த மனக்கோணலைத் தீர்த்துத் தீமையினை விலக்கி நல்வழியில் செலுத்தும் மாண்புடைய சொற்களால் முறைப்பட இயற்றப்பெற்றவை. நூலெனச் சிறப்பித்துப் போற்றப்படுவதாக இயம்புகின்றார். மேலும், இன்ப துன்பநிலை இரண்டையும் ஒப்பக்கருதும் மனச்செம்மையே 'திரு' எனும் சொல்லுக்குரிய பொருள் இவரால் சுட்டப்பெறுகின்றது. (16)*

*மொத்தத்தில், 'திருமுறை' என்பது மக்கள் வாழ்வில் வளம்பெறச்செய்யும் அறநூல் எனவும், சைவ அருளாளர்களால் ஒழுங்குபட வகுக்கப்பட்ட அழகும், தெய்வீகமும் பொருந்திய தோத்திர நூல் எனவும் வழங்கபடும். 'திருமுறை' எனும் பெயர்வழக்கு மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்துக் கல்வெட்டுகளில்தான் முதன்முதலாகக் காணப்படுகின்றதாக மொழியப்படுகிறது. (17)*

***திருமுறை கண்ட வரலாறு:***

*கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார் இயற்றிய 'திருமுறை கண்ட புராணம்' எனும் நூல், திருமுறைகள் கண்டு தொகுக்கப்பெற்ற செய்தியை விரிவாகக் கூறுகிறது. திருமுறை கண்ட சோழன் எனப் போற்றப்பெறுபவன் 9-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 10-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்த முதலாம் இராசராசனாவான். (18) திருமுறைகண்ட புராணத்தில் இவன் அபய குலசேகர சோழன் எனப் பெயர் பெறுகிறான்.*

*அபய குலசேகர சோழ மன்னன் தமது அரசவையில் எழுந்தருளிய சிவனடியார்கள் தேவாரப் பாடல்கள் சிலவற்றை ஓதக்கேட்டு மூவர் பாடிய திருமுறைப் பாடல்கள் அனைத்தையும் தொகுத்து வெளிக்கொணர விருப்பம் கொண்டான். தேவாரத் திருப்பதிகங்களை எங்குத் தேடியும் அவை முழுவதும் கிடைக்கவில்லையாதலால் சோழமன்னன் பெரிதும் வருத்தினான்.*

*அப்போது, திருநாரையூரில் நம்பியாண்டார் நம்பி எனும் ஆதிசவைச் சிறுவர், அவ்வூரில் எழுந்தருளித் திகழும் பொல்லாப்பிள்ளையார் திருவருளை நிரம்பப்பெற்றுணர்ந்த ஞானியாகத்*

*திகழ்ந்தார். அவரது பெருமையறிந்த சோழ மன்னன் உடனே அவ்விநாயகப் பெருமானுக்குரிய நிவேதனப் பொருள்களை நிரம்ப எடுத்துக் கொண்டு திருநாரையூர் சென்றான்; நம்பியாண்டார் நம்பியும் அவ்வாறே அந்நிவேதனப் பொருட்களையெல்லாம் போல்லாப்பிள்ளையார் முன்னர் வைத்து அமுதுசெய்தருளுமாறு வேண்ட, விநாயகப் பெருமானும் அவ்வாறே அவையனைத்தையும் அமுது செய்தருளினார்.*

*அதன் பின்னர், சோழமன்னர் விருப்பப்பட்ட தேவாரப் பாடல்கள் இருக்கும் இடத்தைத் தமக்குத் தெரிந்து அருளுமாறு நம்பியாண்டார் நம்பி வேண்டினார். அவரது வேண்டுகோளுக்கிசைந்த பொல்லாப் பிள்ளையார், தில்லைப் பொன்னம்பலத்தினருகில், தேவார ஆசிரியர் மூவருடைய அழகிய கைகளின் அடையாளமுள்ள அறையினுள்ளே தேவாரத் திருமுறைகள் வைத்துப் பூட்டப்பெற்றுள்ளன என்று கூறித் திருதொண்டர்களுடைய வரலாறுகளையும் திருவாய் மலர்ந்தருளினார்.*

*அது கேட்டு மகிழ்வுற்ற நம்பியாண்டார் நம்பியும் சோழ மன்னனும் தில்லையடைந்தனர். பின்னர் சோழ மன்னன் தில்லைவாழந்தணர்களிடம் தில்லைச் சிற்றம்பல மேற்றிசையிலுள்ள அறையிலே தேவாரத் திருமுறைகள் இருத்தலைத் தெரிவித்து அவ்வறையைத் திறக்கும்படி வேண்டினான். அது கேட்ட தில்லை வாழந்தணர்கள், 'தமிழ் வைத்த மூவர் வந்தால் அறை திறக்கும்' என்றனர். சோழ மன்னனும் உடனே தில்லைக் கோயிலினுள் மூவர் முதலிகளான அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவருக்கும் விழாவெடுத்து, அவர்களை அலங்கரித்துத் திருமுறை ஏடுகளிருந்த அறையின்முன் எழுந்தருளச் செய்து, அவ்வந்தணர்களை நோக்கி, "`தமிழ் வைத்த மூவர்' வந்து விட்டனர்; இனி அறையைத் திறவுங்கள்" எனக் கேட்டுக் கொண்டான்.*

*அந்தணர்கள்களும் அவ்வாறே அறையைத் திறந்தார்கள். அவ்வறையினுள்ளே இருந்த ஏடுகள் எல்லாம் செல் அரித்து இருந்தன. புற்று மண்ணால் மூடப்பட்டுள்ள அவ்வேடுகளின் மேல் எண்ணெய்க் காப்பிட்டு அவற்றை எடுத்துப்பார்த்த அளவில் அவற்றுள் பெரும்பாலான ஏடுகள் பழுதுபட்டிருந்தன. அதைக் கண்ட சோழமன்னன் பெரிதும் வருந்தினான். அந்நிலையில், "தேவாரப்பதிகங்களிலே இக்காலத்துக்கு வேண்டுவனவற்றை மாத்திரம் வைத்துவிட்டு மற்றவைகளைச் செல்லரிக்கச் செய்தோம்" என்றதொரு அருள்வாக்குக் கேட்டது. அதனையுணர்ந்த மன்னன் ஒருவாறு ஆறுதலடைந்து செல்லரிக்காது எஞ்சியுள்ள திருப்பதிகங்களை மட்டும் எடுத்து முன்போலத் தொகுத்துதரும்படி நம்பியாண்டார் நம்பியை வேண்டிட, நம்பியும் மூவர் முதலிகளின் தேவாரங்களை முதல் ஏழு திருமுறைகளாக வகுத்தருளினார். ஏனைய ஏடுகளையும் அவர் எடுத்து வரிசையாக அமைத்துப் பதினொரு திருமுறைகளாக வகுத்தருளினார். இவ்வாறு வகுக்கப்பெற்ற பதினொரு திருமுறைகளிலுமுள்ள பாடல்களுக்கு எல்லாம் இறைவன் ஆணைப்படி திருநீலகண்டப் பெரும்பாணர் மரபிலே பிறந்த பெண் ஒருத்தி பண் வகுத்தளித்தாள். இறையருளால் அவ்வம்மையார் வகுத்த இசைமரபே தேவாரத் திருப்பதிகங்களுக்குப் பொருந்திய தெய்வ இசையாக மிளிர்ந்தது. (19)*

**பன்னிரு திருமுறைகள்**

*திருஞானசம்பந்தர் முதலாகச் சேக்கிழார் ஈறாக அமைந்த இருபத்தேழு அருளாளர்களின் அமுத வாக்குகளே பன்னிரு திருமுறைகளாகத் தொகுத்தளிக்கப்பெற்றுள்ளன. இந்தச் சைவத் திருமுறைகள் தொகையால் பன்னிரண்டெனவும் இயற்றிய அருளாளர்களின் எண்ணிக்கையால் இருப்பத்தேழு எனவும் நூல்களின் எண்ணிக்கையால் நாற்பது எனவும், பாடல்களின் எண்ணிக்கையால் சற்றொப்பப் பதினெண்ணாயிரம் எனவும் பரந்து கிடக்கும் அருளனுபவ பாக்களாகத் திகழ்கின்றன. (20)*

*பன்னிரு திருமுறைகளுள், 'திருக்கடைக்காப்பு' என வழங்கப்பெறும் தேவாரப் பாடல்களின் முதல் மூன்று திருமுறைகளை அருளிச் செய்தவர் திருஞான சம்பந்த சுவாமிகள்; அடுத்துள்ள 4, 5, 6-ஆம் திருமுறைகளான தேவாரத் திருப்பதிகங்களைப் பாடியருளியவர் திருநாவுக்கரசு*

*சுவாமிகள்; ஏழாவது திருமுறையை அருளிச் செய்தவர் சுந்தர மூர்த்தி சுவாமிகள். அந்தத் தேவாரப் பாடல்கள் 'திருப்பாட்டு' என வழங்கப்பெறும்; எட்டாந் திருமுறையாகிய திருவாசகம், திருக்கோவையார் முதலியவற்றை அருளிச் செய்தவர் மாணிக்கவாசக சுவாமிகள்; ஒன்பதாம் திருமுறை திருவிசைப்பா, திருப்பால்லாண்டு என இரு பிரிவுகளாக அமைந்துள்ளது. இதனைப் பாடியருளியவர் ஒன்பதின்மர்; பத்தாம் திருமுறையாகிய திருமந்திரம் திருமூலரால் அருளிச் செய்யப்பட்டதாகும்; பதினோராம் திருமுறை 40 பிரபந்தங்களைக் கொண்டு விளங்குகின்றது. இதனை அருளிச் செய்தவர் பன்னிரண்டு அருளாசிரியராவர்; பன்னிரண்டாம் திருமுறை எனும் பெரிய புராணம் சேக்கிழார் சுவாமிகளால் பாடியருளப் பெற்றதாகும். 63 நாயன்மார்களின் பெருமையையும் 9 தொகையடியார்களின் மாண்பையும் உள்ளவாறு உணர்த்தவல்ல இப்புராணம் திருத்தொண்டர் புராணத்தின் சாரமாகும். (21)*

*திருமுறையில் திருவிசைப்பா*

*சைவத்திருமுறைகள் பன்னிரண்டில், ஒன்பதாம் திருமுறையாகத் திகழ்வது திருவிசைப்பாவும் திருபல்லாண்டுமாகும். திருமாளிமைத் தேவர் முதல் சேதிராயர் ஈறாகவுள்ள அருளாசிரியர் ஒன்பதின்மரும் பாடியருளிய இருபத்தெட்டுத் திருப்பதிகங்களைத் திருவிசைப்பா என்றும் சேந்தனார் பாடிய பல்லாண்டிசையைத் திருப்பல்லாண்டு என்றும் பகர்வது மரபு. இவற்றைத் திருவிசைப்பாமாலை என ஒன்றாக வழங்குவர் திருமுறைகண்ட புராண ஆசிரியர். (22)*

*ஒன்பதாம் திருமுறையில் இருபத்து ஒன்பது திருப்பதிகங்கள் உள்ளன. தேவாரத் திருப்பதிகங்களைப் போன்று இசைநலம் வாய்ந்தவனாக இத்திருப்பதிகங்கள் விளங்குவதனால் இவை திருவிசைப்பா என வழங்கப்பெறலாயின என்று கருத்துரைக்கப்படுகின்றது. இத்திருமுறையின் இறுதியில் உள்ள இருபத்தொன்பதாம் திருப்பதிகம் எங்கும் நீக்கமறக் கலந்து விளங்கும் எல்லாம் வல்ல இறைவனுக்குப் பல்லாண்டிசை கூறி வாழ்த்துவதாதலால் திருப்பல்லாண்டு என்னும் சிறப்புக் பெயரைப் பெறுவதாயிற்று. (23)*

*திருமுறைகளின் வரிசையில் ஒன்பதாம் திருமுறை மிகவும் சிறப்பான இடம்பெறுவதோடு சிறந்த தொகைநூலாகவும் கருதப்படுகின்றது. இத்திருமுறை 301 பாடல்களைக் கொண்டு பிற திருமுறைகளினின்று அளவில் சிறியதாய் விளங்கிடினும், சிவாலய வழிபாட்டில் பஞ்சபுராணம் என ஓதப்பெறும் திருமுறைப்பாடல்கள் ஐந்தினுள் திருவிசைப்பாவில் ஒன்றும் திருப்பல்லாண்டில் ஒன்றுமாக இரண்டு திருப்பாடல்களை இத்திருமுறையிலிருந்து ஓதிவருகின்றனர். இவ்வழக்கம், இத்திருமுறையில் சைவப் பெருமக்களுக்கு உள்ள ஆழ்ந்த ஈடுபாட்டை நன்கு புலப்படுத்துவதாகும். (24)*

**திருவிசைப்பா: சொற்பொருள் விளக்கம்**

*'திருவிசைப்பா' என்ற சொற்றொடர் திரு, இசை, பா என்று மூன்று தமிழ்ச் சொல்களால் ஆனது; இறைவனது புகழைப்பற்றிப் பாடப்பட்ட பா என்று பொருள்படும் அப்பாட்டுகளை ஒன்பது அருளாசிரியரும் இறையருளில் தோய்ந்து அவற்றை ஓதுபவரிடம் இறையருள் திகழும் வண்ணம் பாடிய இசைப்பாட்டுகள் ஆதலால், அவை திரு இசைப்பா (திருவிசைப்பா) எனப்பட்டன. (25) "திருவிசைப்பா என்னும் சொறொடரானது தன்னிற் சிறந்த உருவும், நலனும், ஒளியும், பிறிதொன்றிற்கில்லாத அழகும் வாய்ந்ததனால், கண்டோரால் விரும்பபடும் தன்மை வாய்ந்த இறைவனது பொருள்சேர் புகழ்களைக் கூறும் தமிழ்ப்பாட்டு என்று பொருள்" என அ. சிதம்பரனார் கூறுகின்றார். (26) ப.அ. முத்துத்தாண்டவராய பிள்ளை அவர்கள், "திருவிசைப்பா - அழகிய இசை பொருந்திய பாக்களை உடையது என, அன்மொழித்தொகையாய்த் திருமுறைக்குக் காரணக் குறிப்பாயிற்று (27)" என மொழிக்கின்றார். திரு இசைப்பா என்பது, "கடவுள் தன்மை பொருந்திய இசைப்பாட்டுகள்" எனப் பொருள் தருவதாக எம் நாராயண வேலுப்பிள்ளை தமது நூலில் சுட்டுகின்றார். (28) மு. அருணாசலம் தமது நூலில், திருவிசைப்பா என்ற பெயருக்கு, இசையில் அமைந்த பதிகங்களுடைய நூல் என்றும், பரம்பொருளின் புகழை (இசையை) இசைக்கின்ற பா என்றுமே பொருள் கொள்ளத் தகுந்தது என்று விளக்கமளிக்கின்றார். (29)*

திருவிசைப்பா என்பது முத்திச் செல்வத்தைத் தரவல்ல பெருமை வாய்ந்த செய்யுள் என்ற கருத்துடையது என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. (30) ஆக, இறைவனைப் போற்றிப் புகழ்ப்பாடும் இனிய, இசைநயமிக்க, தெய்வீகத்தன்மைப் பொருந்திய அருட்பாடல்களின் தொகுதியே 'திருவிசைப்பா' என நாம் பொருள்கொள்வது இவ்விடம் பொருத்தமாகும்.

**திருவிசைப்பாக் காலம்**

ஒன்பதாம் திருமுறைப் பதிகங்களைப் பாடிய ஆசிரியப் பெருமக்கள் வாழ்ந்த காலம் முதல் ஆதித்த சோழன் தொடங்கி கங்கை கொண்ட சோழன் ஈறாகவுள்ள சோழ மன்னர்களின் ஆட்சிக்காலமாகும், அதாவது கி.பி. 9, 10, 11-ஆம் நூற்றாண்டுகளாகும் என, க. வெள்ளைவாரணன் தமது நூலில் கருத்துரைக்கின்றார். (31) மேலும், தமிழ் நாட்டில் அயலாரது ஆட்சியை அகற்றி மீண்டும் சோழப் பேரரசை நிறுவிய பிற்காலச் சோழர் பேரரசு கி.பி. 9ஆம் நூற்றாண்டு இறுதியில் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு தோன்றி, கங்கைநதி பாயும் வட நாட்டிலும் கடல் கடந்த கடாரம் முதலிய பிற நாடுகளிலும் புகழுடன் நிலைபெற்ற 10-ஆம், 11-ஆம் நூற்றாண்டு காலமே பிற்காலச் சோழ மன்னர்கள் இவ்வுலகில் பெறற்கரும் வெற்றியைப் பெற்றுச் சிறப்புடன் ஆட்சிபுரிந்த பொற்காலமாகும்; இத்திருவிசைப்பாத் திருமுறை தோன்றிய நற்காலமாகும் என்றும் கூறுகிறார். இத்திருமுறையானது தெய்வங்கொள்கையாகிய சிவநெறியினால் தமிழ் வேந்தர் பெற்ற வெற்றியையும் அவ்வெற்றியின் விளைவாகத் தமிழகத்தார் பெற்ற அமைதி நிலையையும் அவ்வமைதியை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்தோங்கிய சைவ சமயத்தின் மாண்பையும் நன்கு விளக்கும் திருவிலக்கியமாகத் திகழ்கின்றது. தஞ்சை பெருவுடையார் திருக்கோயிலைக் கட்டிய முதலாம் இராசராச சோழனால் அத்திருக்கோயிலில் ஆடல் பாடல் நிகழ்த்துவதற்காக நியமிக்கப்பெற்ற தளிச்சேரிப் பெண்களுள் சிலர், 'எடுத்த பாதம்', 'மழலைச் சிலம்பு' (திருமாளிகைத் தேவர் திருவிசைப்பா), 'நீறணி பவலக் குன்றம்' (திருமாளிகைத் தேவர் திருவிசைப்பா), எனத் திருவிசைப்பாப் பாடல்களில் அமைந்த சொற்றொடர்களையே தமக்குரிய பெயராகப் பெற்றுள்ளனர்; மக்களுக்குரிய பெயராகவும் இத்தொடர்கள் வழங்கப்பெறுகின்றன. இப்பெயர் வழக்கத்தை ஊன்றி நோக்குமிடத்து, முதலாம் இராசராசனது ஆட்சிக் காலத்தில் இத்திருவிசைப்பாவிற்கு அமைந்த தனிச் சிறப்பு இனிது புலனாகின்றது. (32)

**திருவிசைப்பாத் தொகுப்புமுறை**

திருவிசைப்பாப் பதிகங்கள், இசைப்பா என்றமையால், இது தேவாரங்கள் போல இசைக்குரியது என்பது தெளிவு. திருவிசைப்பாப் பாடல்கள் தொகுக்கப்பட்டது குறித்துப் பின்வருமாறு கருத்துரைக்கப்படுகின்றது: "நம்பியாண்டார் நம்பி தேவாரம் தொகுத்தபோது, சமயாசாரியர் பாடல்களான தேவார திருவாசகங்கள் அன்றி, தம் காலத்திலும் தம் காலத்திற்கு முன்பும் வேறு இசைப் பாடல்கள் இருந்தமை கண்டு, அவை இசைப்பாடல்களால் இருந்தமையால் தேவாரத்தோடு ஒத்துப் போற்றத் தக்கன என்று கருதியும், ஆதரிப்பாரின்றி அவை கைநெகிழுமாறும் விடக்கூடாது என்று முடிவு செய்தும், தம் காலத்தில் இருந்த அரசன் போன்ற மெய்யன்பர்களுடைய விருப்பத்திற் கிணங்கியும், திருவிசைப்பாமாலையைத் தொகுத்தார்." (33)
இதில் மற்றொரு கருத்தும் உண்டு. திருவிசைப்பாக் கொண்ட தலைங்கள் பத்தனான்கு: அவற்றுள் தேவாரப் பாடல் பெற்ற தலங்களாவன: கோயில் (சிதம்பரம்), திருவீழிமிழலை, திருவாவடுதுறை, திருப்பூவணம், திருவிடைமருது, திருவாரூர் முதலான ஆறு ஆகும். ஏனையவைகளான: திருவிடைக்கழி, களந்தை ஆதித்தேச்சுரம், கீழ்க்கோட்டூர் மணியம்பலம், திருமுகத்தலை, திரைலோக்கியசுந்தரம், கங்கைகொண்ட சோழேச்சுரம், திருச்சாட்டியங்குடி, தஞ்சை இராசராசேச்சுரம் முதலான எட்டுத் தலங்களும் தேவாரப் பாடல் பெறாத தலங்களாகும். இவ்வெட்டுத் தலங்களும் வேறெந்தத் திருமுறையிலும் குறிப்பிடப் பெறவில்லை. இவற்றுள் நான்கு சோழப் பரம்பரையினால் கட்டப்பெற்ற கோயில்கள். களந்தை ஆதித்தேச்சுரம் ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆதித்த சோழனாலும், திரைலோக்கிய சுந்தரம் முதல் இராசராச சோழ மன்னனது மூன்றாம் மனைவியாகிய திரைலோக்கிய மாதேவியாலும் (சுமார் கி.பி. 1000),

*தஞ்சைப் பெருங்கோயில் இராசராச மன்னனாலும் (1008), கங்கைகொண்ட சோழேச்சுரம் இவனது மகன் முதல் இராசேந்திரனாலும் (1035) கட்டப்பெற்றாவையாகும். அன்றியும் இந்நான்கு தலங்களும், நம்பியின் காலத்தில் வாழ்ந்து இராசராச மன்னனாலேயே பெரிதும் அபிமானிக்கப் பெற்றிருந்த கருவூர்த் தேவர் பதிகம் பாடிய சிறப்புடையவை. ஆகவே, நம்பியாண்டார் நம்பி இசைப் பாக்களை ஒரு திருமுறையாகத் தொகுப்பதற்கு உடன் காலத்தனவாகிய இப்பொருத்தங்களும் இருந்தன. (34)*

*மேலும், மிக்க எழுச்சியோடு வளர்ந்து வந்த சோழ மன்னர் காலத்தில் புதிதாக எழுந்துவந்த தலங்களுக்கும் அருட்பாசுரங்கள் என்ற பெயரில் சுவாமி திருமுன் பாடுவதற்கான பாசுரங்கள் இருக்குமானால் அந்தப் பிரதேச மக்களுடைய சமய உணர்வு நிறைவு பெறுவதோடு, எழுச்சியும் பெறும். இவை, நம்பியாண்டர் இவ்விசைபாக்களை ஒரு தனித் திருமுறையாகத் தொகுத்தற்குரிய காரணங்களாகத் தெரிகின்றன. இல்லையானால் முதல் எட்டுத் திருமுறைகளைச் சுமார் 1000 பாடல்கள் வீதமும், பத்தாம் திருமுறையை மட்டும் மிகச் சுருங்கிய அளவில் இயன்ற 300 பாடல்களே கொண்டதாகத் தனியே முறைப்படுத்தியதற்கு ஓர் அமைதி காண்பதற்கில்லை. எனவே, இந்தத் திருவிசைப்பா மாலையானது அக்கால அரசியல் நிலைமைக்கும் தன்னகத்தேயுள்ள இசைத்தன்மைக்கும் பொருந்த ஒரு தனித் திருமுறையாயிற்று என்பது நன்கு விளங்கும். இதற்கு மேல் இசைப்பாடல்கள் கிடைக்காமல் போனதால், இத்திருமுறை இந்த அளவோடு நின்றது எனக் கருத்துரைக்கப் படுகின்றது. (35)*

*இருப்பினும், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு எனும் தலைப்புகொண்ட நூலின் பதிப்பாசிரியரான அ.ச. ஞானசம்பந்தன் தமது முன்னுரையில், இராசராச சோழ காலத்தில் திருவிசைப்பாப் பாக்கள் தொகுக்கப்பெற்றன என்று திருமுறை கண்ட புராணம் கூறுவது பொருத்தமில்லாக் கூற்று என்கிறார். அவரது கூற்றுப்படி, இராசராச சோழன் திருமுறைகளைத் தில்லையில் தேடிக் கண்டு பிடித்தான் என்று கூறும் கதை சற்றும் பொருத்தமில்லாததாகும். அது உண்மையாக இருந்திருப்பின் சேக்கிழார் அதனைக் கூறாமல் விட்டிருக்கமாட்டார். எனவே, காலாந்திரத்தில் எட்டுத் திருமுறைகளோடு நின்றிருந்த சைவத் திருமுறைகள் பிற்காலச் சோழர் காலத்தில் கருவூர்த் தேவர் காலத்தில் நீட்டிக்கப்பெற்றிருத்தல் வேண்டும். கங்கைகொண்ட சோழபுரம் முதலிய ஊர்கள் சோழர்கள் காலத்தில் தோற்றுவிக்கப்பட்டுச் சிறப்புப் பெற்றான. ஆனால், அவை பாடல் பெறாத ஊர்களாதலால், மக்கள் அவற்றில் ஈடுபாடு கொள்ளாமல் இருந்திருத்தல் வேண்டும். அக்குறையைப் போக்கக் கருவூர்த் தேவர் முதலிய அருளாளர்கள் அந்த ஊர்களுக்கென்று இசைப்பா பாடல்களை இயற்றிப் புழக்கத்தில் விட்டிருக்க வேண்டும். அக்காலகட்டத்தில் அவற்றை ஒன்பதாம் திருமுறை என்று அழைக்க முடியாது. பின்னர் வந்தவர்கள் இப்பாடல்களும் இறைவனைப் பற்றி உள்ளனவதலாலும் அவற்றில் பெரும்பாலான பாடல்கள் தில்லையைப் பற்றியன ஆதலாலும் அவற்றைத் திருமுறைகளோடு சேர்க்க வேண்டுமென்ற கருத்துடன் இந்த 301 பாடல்களையும் தொகுத்து ஒன்பதாம் திருமுறையாக வகுத்தனர். இப்பாடல்கள் அனைத்தும் கட்டளைக் கலித்துறை வகையைச் சேர்ந்தவை. இவ்வகைப் பாடல்கள் தமிழ் இலக்கியத்தில் மிகப் பழங்காலந்தொட்டே பயின்று வந்துள்ளன. ஆதலால், இசை அமைத்துப் பாடுவதற்குப் பொருத்தமாக உள்ளன. எனவே, 'திருவிசைப்பா' என்ற பெயரை அமைத்தனர் போலும் என மொழியப்படுகிறது. (36)*

***திருவிசைப்பா ஆசிரியரும் பாடல் தொகையும்***

*திருவிசைப்பா மாலையை அருளிச்செய்த ஆசிரியர்கள் திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருத்தி நம்பிகாட நம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் முதனால ஒன்பதின்பர் ஆவர். இதனை ஒரு பழைய செய்யுள் தெளிவுறுத்துகின்றது. (37) இவர்களுள் திருமாளிகைத் தேவர் பாடிய பதிகங்கள் நான்கும், சேந்தனர் பதிகங்கள் நான்கும், கருவூர்த்தேவர் பதிகங்கள் பத்தும், பூந்துருத்தி நம்பிகாட நம்பி பாடிய பதிகங்கள் இரண்டும், கண்டராதித்தர் பதிகம் ஒன்றும், வேணாட்டடிகள் பதிகம் ஒன்றும், திருவாலியமுதனார் பதிகங்கள் நான்கும், புருடோத்தமநம்பி பதிகம் இரண்டும்,*

*சேதிராயர் பதிகம் ஒன்றும், ஆக, இருபத்தொன்பது பதிகங்கள் இத்திருமுறையில் இணைக்கப் பெற்றுள்ளன. (38)*

*இத்திருமுறையிலுள்ள பாடல்தொகை 365 என்று ஒரு பழைய செய்யுள் கூறுகின்றது. இருப்பினும், தற்போது கிடைக்கப்பெற்றுள்ள பாடல்களின் தொகை 301 தான் எஞ்சிய 64 பாடல்களும் ஏடுகளில் சிதைந்திருத்தல் வேண்டும் அல்லது செய்யுளில் குறிக்கப்பட்ட '365' என்ற தொகை ஏடு எழுதுவோரால் சிறிது மாறுபட்டிருக்க வேண்டும். கருவூர்த்தேவருடைய திருப்பூவனப் பதிகம் எட்டே பாடல்களைக் கொண்டுள்ளது. பூந்துருத்தி நம்பிகாட நம்பியின் திருவாரூர்ப் பதிகம் இரண்டே பாடல்களைக் கொண்டுள்ளது. இதனை நோக்கும்போது இத்திருமுறையில் சில பாடல்கள் சிதைந்து மறைந்து போயின என்பது புலனாகும். (39) இருப்பினும், கிடைக்கப்பெறாத ஏனைய பாடல்கள் எப்பதிகங்களுக்குரியன, எவ்வாறு சிதைந்து போயின என்பதொன்றும் விளங்கவில்லை என மு. அருணாசலம் தமது நூலில் கூறுகின்றார். அவரது கூற்றுப்படி, இத்திருமுறையில் மேலும் பதிகங்கள் இருந்திருத்தல் கூடும். பதிகம் அதிகம் இருந்தால் 11 பாடல்களே இருக்கும் 29 பதிகங்களிலும் 320 பாடல்களே இருக்க முடியும். ஆகவே, 365 என்றதில் பிழை இருக்கக்கூடும் என்கிறார். (40) ஆனாலும், அவர் கூறியது போன்று பதிகத்திற்கு அதிகபட்சம் 11 பாடல்கள் என்பது மரபேயொழிய, விதியல்ல. திருமாளிகைத் தேவர் பாடிய மூன்றாவது பதிகத்தில் 12 பாடல்களும் சேந்தனரின் ஐந்தாவது மற்றும் இருபத்தொன்பதாவது பதிகங்களில் தலா 13 பாடல்களும் இடம்பெற்றிருப்பது அதற்குத் தக்கச் சான்றாகும். ஆக, அவரது கூற்றான 320 பாடல்களே இருக்க முடியும் என்பதும் ஏற்புடையதாகத் தெரியவில்லை.*

*ஒன்பதாம் திருமுறையிலுள்ள இருபத்தொன்பது பதிகங்களில், திருவிசைப்பா பதிகங்கள் 28 ஆகும். தற்போதுள்ள 301 பாடல்களில் திருப்பல்லாண்டிற்குரிய 13 பாடல்கள் நீங்கலாக திருவிசைப்பாவிற்குரிய பாடல்கள் மொத்தம் 288 ஆகும். (காண்க, பின்னிணைப்பு: அட்டவணை 1) (41).*

***திருவிசைப்பாப் பண்கள்:***

*திருவிசைப்பாவில் பயின்று வந்துள்ள பண்களாவன காந்தாரம், புறநீர்மை, சாளரபாணி, நட்டராகம், இந்தளம், பஞ்சமம் என்ற ஆறும் ஆகும் என்பதனை ஒரு பழைய செய்யுள் குறிப்பிடுகின்றது. (42) இப்பண்களில் பஞ்சமம் 21 (திருப்பல்லாண்டு ஒரு பதிகமும் சேர்த்து), காந்தாரம் 2, புறநீர்மை 3, நட்டராகம் 1, இந்தளம் 1, சாளரபாணி 1 ஆகும். இவற்றுள் முதல் ஐந்தும் தேவாரத்துள் காணப்படுவன. சாளரபாணிப் பண் மட்டும் தேவாரத்துள் காணப்படாதது. இப்பண்களை அமைத்தவர் யார் என்பதற்கான விளக்கங்கள் குறிக்கப்படவில்லை. ஆனாலும், திருவிசைப்பா ஆசிரியர் இருவர் தங்கள் பாடலிலேயே பண்ணின் பெயரை அமைத்துப் பாடியிருப்பதை இவ்விடம் சுட்டலாம். அதாவது, கருவூர்த் தேவர் தாம் பாடிய திரைலோக்கிய சுந்தரப் பதிகம் இறுதிப்பாடலில் அதற்குரிய காந்தாரப் பண்ணையும், புருடோத்தம நம்பி தமது கோயில் திருப்பதிகத்தின் முதல் பாடலில் அதற்குரிய பஞ்சமப் பண்ணையும் பெயர் குறிப்பிட்டுப் பாடியிருக்கிறார்கள். (43)*

*இத்திருவிசைப்பாப் பதிகங்களில் பாதாதிகேசமாகத் திருமாளிகைத் தேவரும் திருவாலியமுதனாரும் ஒவ்வொரு பதிகம் பாடியுள்ளனர். கருவூர்த்தேவருடைய கீழ்க் கோட்டூர் மணியம்பலம் திரைலோக்கிய சுந்தரப் பதிகங்களும், திருமாளிகைத் தேவர் 'உறவாகிய யோகம்' என்ற கோயில் பதிகமும் அகத்துறைப் பதிகங்கள். ஏனையவற்றுள் ஏழு பதிகங்கள் அகத்துறையாகவும் அந்தாதியாகவும் உள்ளன.*

***திருவிசைப்பாத் தலங்கள்***

*திருவிசைப்பாப் பெற்ற தலங்கள் பதினான்கு. இவற்றுள் தில்லையாகிய கோயிலுக்கு மட்டும் உள்ள பதிகங்கள் பதினைந்து (திருப்பல்லாண்டு ஒரு பதிகம் நீங்கலாக) ஏனைய பதின்மூன்று திருத்தலங்களும் பதின்மூன்று திருப்பதிகங்களால் போற்றிப் பாடப்பெற்றுள்ளன. (44)*

*திருவிசைப்பாப் பாடலாசிரியர்கள் ஒன்பதின்மருள் திருமாளிகைத் தேவர், கண்டராதித்தர், வேணாட்டு அடிகள், திருவாலியமுதனார், புருடோத்தம் நம்பி, சேதிராயர் ஆகிய அறுவரும் தில்லையை மட்டும் போற்றிப் பாடியுள்ளனர். ஏனைய மூவருள், சேந்தனார் தில்லைக்குத் திருப்பல்லாண்டு பாடியுள்ளார். இதுவே பஞ்ச புராணத்துள் ஒன்று. இச்சேந்தனார் திருவீழிமிழலை, திருவாவடுதுறை, திருவிடைக்கழி என்னும் மூன்று தலங்களுக்கும் திருவிசைப்பாக்கள் பாடியுள்ளார்; பூந்துருத்தி நம்பிகாட நம்பி தில்லைக்கு ஒரு பதிகமும், திருவாரூருக்கு ஒரு பதிகமும் பாடியுள்ளார்; கருவூர்த்தேவர் தில்லைக்கு ஒரு பதிகமும், திருக்களந்தை ஆதித்தேச்சுரம், திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம், திருமுகத்தலை, திரைலோக்கிய சுந்தரம், கங்கைகொண்ட சோழேச்சுரம், திருப்பூவணம், திருச்சாட்டியங்குடி, தஞ்சை இராசராசேச்சுரம், திருவிடைமருதூர் ஆகிய தலங்களுக்கு ஒவ்வொரு பதிகமும் பாடியுள்ளார். (45)*

*திருவிசைப்பாத் தலங்கள் பதினான்கனுள் திருப்பூவணம் எனும் ஒரு தலம் மட்டுமே சோழநாட்டுக்கு அப்பால், பாண்டிய நாட்டில் உள்ளது. ஏனைய பதின்மூன்று தலங்களும் சோழ நாட்டில் உள்ளன. ஆக, சோழர் ஆதிக்கம் ஓங்கியிருந்த காலத்தில் இத்திருசைப்பாப் பதிகங்கள் தோன்றின என்பது இதிலிருந்து பெறப்படுகின்றது. இந்தப் பதினான்கு தலங்களுள், தேவாரப் பதிகம் பெற்றவை திருப்பூவண திருவீழிமிழலை, திருவாவடுதுறை, திருவிடைமருது, திருவாரூர்தில்லை முதலான ஆறு தலங்களாகும். ஏனையவற்றுள், திருவிடைக்கழி என்பது சிறப்பான ஒரு பழைய தலம். களந்தை ஆதித்தேச்சுரம், திலைரோக்கிய சுந்தரம், இராசராசேச்சுரம், கங்கைகொண்ட சோழேச்சுரம் முதலான நான்கும் திருவிசைப்பாவில் சுட்டபெற்ற சோழர் எழுப்பிய சிறப்புக்குரிய கோயில்களாகும். இந்நான்கனுள், களந்தை மட்டும் பழைய கோயில்; மற்ற மூன்றும், அவற்றுக்குத் திருவிசைப்பாப் பாடிய கருவூர்த் தேவர் காலத்தில் புதிதாய்க் கட்டப்பட்டவையாகும். கீழ்க்கோட்டூர் மணியம்பலம், திருமுகத்தலை, திருச்சாட்டியங்குடி என்ற ஏனைய தலங்களுக்கு வேறு வகை விளக்கம் எதுவுமில்லை. இம்மூன்று தலங்களும் களந்தையோடு சேர்த்துச் சோழ நாட்டின் தென்கிழக்கு மூலையில் உள்ளன. (46)*

***திருவிசைப்பா ஆசிரியர் ஒன்பதின்மர்: சுருக்க வரலாறு***

***(i) திருமாளிகைத் தேவர்***

*திருமாளிகைத் தேவர் என்ற பெரியார் திருவிசைப்பா ஆசிரியருள் முதல்வராவார். இடைமருதிலுள்ள ஐந்து கொத்தாருள் ஒருவரான சைவராயருடைய திருமடத்தை மாளிகை மடமென்று கூறுவர். இவர்கள் சோழ அரசருக்குக் குரு ஆவார்கள். அவ்வகையிலே வந்த ஒருவர் திருவாவடு துறையிலே யோகத்திலமர்ந்துள்ள போகநாதரிடம் தீட்சை பெற்று அவ்வூரிலேயே வாழ்வாராயினார். ஒருநாள் இவர் காவரிக்குச் சென்று நீராடித் திரும்புகையில் மரித்த சவம் ஒன்று எதிர்ப்பட, அதனால் தொடக்குறா வண்ணம் கணநாதனை வேண்டலும், அச்சவம் உயிர் பெற்றெழுந்தது. இப்பெரியார், தவ வலிமையால் அழகு பெற்றுத் தோன்றுவதைக் கண்ட வனிதையர்பலர் இவரைப்போல பல புத்திரர்களை அடைந்தனர். இக்காட்சியைக் கண்ட ஊரார் அலர் தூற்றலும், அவ்வலர் அரசன் காதுகெட்டியது. அரசனும் உண்மை தேறமாடாது அடியவரைக் கொண்டுவரப் பணித்தலும், அடியார் நாமாக்குங் குடியல்லோமென, அரசன் நேரிலே தண்டெடுத்து வர, அதனை எதிர்க்கக் கோயில் மதிலிலுள்ள நந்திகளை ஏவியதாகவும் அவை அரசனுடைய படையைச் சின்னாபின்னமாக்கினவென்றும் கூறுவர். இப்பெரியார் பாடியனவாக நமக்குக் கிடைத்தவை நான்கு திருப்பதிகங்களேயாகும்.*

***(ii) சேந்தனார்***

இரண்டாவதாகக் காணப்படுபவர் சேந்தனாராவார். நிகண்டு நூலான திவாகரம் இயற்றிய திவாகரனைப் போற்றிய சேந்தனார், வீர சோழியம் என்னும் இலக்கண நூல் இயற்றிய பொன்பற்றி காவலன் புத்தமித்தரனாம் சேந்தன், பட்டினத்தடிகள் நன்மதி அமைச்சர் சேந்தனார் போன்ற பலரைப் போன்று திருவிசைப்பா பாடிய சேந்தனாரும் ஒருவர். இவர் திருவீழிமிழலையிலே வாழ்ந்த சிவஞானி யாவார். இவர் லங்கடோறும் சென்று சிவபெருமானை வழிபட்டு வரு ஞான்று தில்லை மூதுரையடைந்து நடங்கண்டு கும்பிட்டு வாழும் நாளையிலே திருவிழா வந்தது. திருத்தேர் செல்லாதிருத்தலும், இப்பெரியார் பல்லாண்டு பாடித் திருத்தேரைச் செலுத்துவித்தனர் என்பர். இவ்வடிகள் பாடியனவாக நமக்குக் கிடைத்தவை, மூன்று திருவிசைப்பாப் பதிகங்களும் ஒரு பல்லாண்டுப் பதிகமுமேயாகும்.

***(iii) கருவூர்த் தெவர்***

*மூன்றாவதாகக் காணப்படுபவர் கருவூர்த் தேவர். இவர் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட சோழ அரசர்களுள்ளே இராசராச மன்னவர் காலத்தவர்; கருவூரிலே பிறந்த காரணத்தால் கருவூர்த் தேவரென்றழைக்கப்படுவர். இவர் காயசித்தி செய்த பெரியார்; பல தலங்களையும் தரிசித்தவர். ஒருகால் திருநெல்வேலி சென்றபோது நெல்லையப்பரை அழைத்ததாகவும், இவரது பெருமை பலருமறியும்படி நெல்லையப்பர் தாமதித்ததாகவும், அதற்காக ஊரைப் பாழாக்கியதாகவும், மறுபடியும் ஊரார் வேண்டுகோட்கிணங்கி ஊர் செழித்தோங்கச் செய்ததாகவும் கூறுவர். இராசராச மன்னவன் கட்டிய தஞ்சை இராசராசேச்சுரத்து அமர்ந்துள்ள எம்பிரான் பெருவுடையார் மருந்து சாத்தியும் நிலையில் நில்லாமையை இப்பெரியார்க்கு உணர்த்த, அவர் ஆங்குச் சென்று எம்பெருமானை வழிபட்டு நிலைநிறுத்தினதாகக் கதையுண்டு. திருவிசைப்பா பாடிய பெரியாருள் இவர் பதிகங்களே மிகுதியாகப் காணப்படுபவை. இவ்வடிகள், கோயில், திருக்களந்தை ஆதித்தேச்சுரம், திருக்கீழ்க் கோட்டூர் மணியம்பலம், திருமுகத்தலை, திரைலோக்கிய சுந்தரம், கங்கை கொண்ட சோளேச்சுரம், திருப்பூவணம், திருச்சாட்டியக் குடி, தஞ்சை இராசராசேச்சுரம், திருவிடைமருதூர் ஆகிய பத்துத் தலங்களில் பாடியவை நமக்குக் கிடைந்திருக்கின்றன. இவர் கருவூரில் சிவலிங்கத்தோடு ஐக்கியமானதாகக் கதை வழங்கும். தஞ்சை இராசராசேச்சுரத்திலும் கர்ப்பக்கிரகத்திற்கு மேற்கில் ஒரு சமாதி கருவூர்த்தேவர் சமாதியென்று வழங்குகிறது.*

***(iv) பூந்துருத்தி நம்பி காட நம்பி***

*பூந்துருத்தி நம்பி காட நம்பி திருவிசைப்பா அடைவினருள் நான்காவதாகக் கூறப்படுபவர்; காவிரியின் கரையிலுள்ள திருப்பூந்துருத்தியிலே தோன்றிய பெரியாராவார். இவருக்குக் காடநம்பியென்று பெயர். இவர் பழுத்த சிவபத்தராய்த் திருப்பதிகடோறும் சென்று சிவபெருமானைச் சேவிப்பதிலும் அவனது அடியார்களான மூவர் பாடலைப் பயில்வதிலும் காலம் போக்கியவர். கணம்புல்லர், கண்ணப்பர், நாவுக்கரையர், சம்பநதர், சேரமான் பெருமான், நம்பியாரூரர் முதலாயினாரைத் தம் பதிகத்துள் புகழ்ந்துள்ளார். இவரது பாடல்கள் மிக்க சுவையுடையனவாக இருக்கின்றன. பிறர் பாடாத சாளரபாணியென்ற பண்ணிலும் இவர் பாடியுள்ளார். இவ்வடிகள் பாடியனவாக நமக்குக் கிடைப்பவை ஒரு முழுப்பதிகமும் மற்றொரு பதிகத்துள் இரண்டு செய்யுட்களுமேயாகும்.*

***(v) கண்டராதித்தர்***

*கண்டராதித்தர் இவ்வடைவினருள் ஐந்தாவதாகக் கூறப்படுபவர். பிற்காலத்திலே சோழ நாட்டை ஆண்ட அரசரிலே பராந்தகன் என்றொரு சோழமன்னவர் இருந்தான். அவனுக்குப் பிள்ளைகள் ஐவர். இரண்டாவது பிள்ளைக்குக் கண்டராதித்தரென்று பெயர். அக்கண்டராதித்த தேவரே திருவிசைப்பா பாடியவர். இவர் அந்தண் ஆரூர் சந்திர மௌலியாம் தியாகேசப் பெருமானது அருணாட்டங்கொண்டு அவ்வூரிலிருந்து அரசு புரிந்தவர்; பல சிவாலயங்களைக் கட்டுவித்தவர். முதலி மூவரது பாடல்களிலே மிக்க பக்தி வாய்ந்தவர். இவரது மனைவியான இராக்கினியும் இவரைப் போன்றே சிவபத்தியிலீடுபட்டவர். சொன்னவாறு அறிவாராம் சேரமான் பெருமாள் நாயனாரைப்போல் அரசவமிசத்தில் தோன்றியும் தனது பக்தி வைராக்கியத்திற் குன்றாமலும்*

*அரசு கோடாமலும் அரசாட்சி செய்து சிவபத்தராயிருந்து இம்மை மறுமைப் பயனையடைந்தவராவார்.*

***(vi) வேணாட்டடிகள்***

*வேணாட்டடிகள் ஒன்பதாம் திருமுறையாசிரியர்களுள் ஆறாமவர். பச்சைக் கற்பூரம் விளையும் கேரள நாடாகிய சேர நாட்டிற்கும் தென்பாண்டி நாட்டிற்கும் நடுவணது வேணாடு. இக்கொடுந்தமிழ் நாட்டிலே அடியார் பத்தி, சிவபத்தியிலே முதிர்ந்தவொரு சிவஞானி தோன்றினார். அவரது இயற்பெயர் இன்னதென்று அறிதற்கில்லை யெனினும், அவர் பிறந்த நாடுபற்றி, அவர்க்கு வேணாட்டடிகள் என்று வழங்கலாயிற்று. சிவபக்தி முதிர்ச்சியானே தலங்கடோறும் சென்று ஆங்குக் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமானை வாயார வாழ்த்தி வணங்கிப் பதிகம் பாடுவார். இவர் பாடிய பதிகம் ஒன்றாகும்.*

***(vii) திருவாலி அமுதனார்***

*திருவாலி அமுதனார் திருவிசைப்பா ஆசிரியருள் ஏழாமவர் ஆவர். திருஞானசம்பந்தப் பெருமான் திருவவதாரஞ் செய்த சீகாழிப்பதிக்கு அருகிலுள்ளது ஆலிநாடு. அதன் தலைமையூர் திருவாலியாகும். அவ்வூரிலே கோயில் கொண்டுள்ள திருமாலுக்கு அமுதனார் என்று பெயர். அவ்வூரிலுள்ள வைணவக் குடியொன்றில் தோன்றிய இவ்வடியார் சிவபத்தியில் ஈடுபடுவாராயினார். தில்லைக் கூத்துகந்த பெம்மானைத் தம் குலநாயகமாகக் கொண்டு அடியார் பத்தி சிவபத்தியில் முதிர்வாராயினார். அம்முதிர்ச்சியானே திருப்பதிகடோறும் சென்று சிவபெருமானது திருவெழில்களை எடுத்துத் தோத்தரிப்பாராயினார். இவர் பாடியனவாக நமக்குக் கிடைத்தவை நான்கு பதிகங்களாகும். இவர் மயிலாடு துறையான மாயூரத்திலே பிறந்ததாகக் கூறுவாருமுண்டு.*

***(viii) புருடோத்தம் நம்பி***

*புருடோத்தம் நம்பி திருவிசைப்பா பாடிய அடைவினருள் எட்டாவதாவார். இருவரும் முன்னவரைப்போல வைணவ மதத்திற் பிறந்து பிறப்பிறப்பற்றவரான சிவப்பெருமானே வழிபடற்கு உரியாரெனக் கொண்டவராகக் கருதப்படுகின்றது. இவரது பெயரே இவ்வாறு கொள்ளுதற்கு இடந்தருகின்றது. புருடோத்தமனாவார் திருமாலேயாம். இப்பெயரைத் தாங்கிய இச்சிவநேயர் சிவபத்தி, அடியவர் பத்தியில் முதிர்ந்தவராய்த் தலயாத்திரை செய்து பதிகம் பாடுவாராயினார். இவர் பாடியனவாக நமக்குக் கிடைத்தவை இரண்டு பதிகங்களேயாயினும் அவை இவரது பத்திச் சுவையைச் செவ்வனே விளங்குகின்றன. தனது ஆவியை முழுமுதற் கடவுளுக்கே கொடுத்துத் தலைவன் தலைவியாக வைத்து முறையிட்டுள்ளாராதலின் இவரது பக்தி நன்கு விளங்குகின்றது.*

***(ix) சேதிராயர்***

*சேதிராயர் திருவிசைப்பாவான ஒன்பதாம் திருமுறையாசிரியருள்ளே ஒன்பதாமவராவார். இவர் சேதி நாடாண்ட குறுநில மன்னவர். சேதி நாடென்பது வீரட்டானங்களுள் ஒன்றாய் அந்தகாசுரனை சங்கரித்த திருக்கோவலூரைச் சுற்றியுள்ள நாடு. அறுபான்மும்மை நாயன்மாருள் ஒருவரான நரசிங்க முனையரையர் வழியில் வந்த இவர், அடியார் பத்தி சிவபக்தியிற் சிறந்தவராய் இருந்து தம் முன்னோரை ஒப்பத்தாமும் அடியார் வரிசையுள் சேரும் புண்ணியம் செய்தவராவர். இவர் பாடிய பதிகம் ஒன்றே கிடைத்துள்ளது. மொத்தத்தில் இவ்வென்பதின்மரும் பாடிய, பாடியனவாக நமக்குக் கிடைத்துள்ள திருப்பதிகங்கள் இருபத்தொன்பதுக்குத் திருப்பாசுரம் முந்நூற்று ஒன்றாகும். இவ்வரலாறு இலக்கண விள்ளக்க ஆசிரியர் பரம்பரை திருவாரூர் சோமசுந்தர தேசிகர் எழுதியது. (47)*

***முடிவுரை***

மொத்தத்தில், திருஞானசம்பந்தர் பாடிய தேவாரப் பதிகங்கள் தொடங்கி சேக்கிழார் பாடிய திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணம் வரையுள்ள சைவ அருள் நூல்கள் சைவத் திருமுறைகள் என வழங்கப்பெறுகின்றன. இப்பன்னிரு திருமுறைகளின் வரிசையில் ஒன்பதாம் திருமுறையாகத் திகழும் திருவிசைப்பா அளவால் மிகவும் குறைந்த பாடல்களைக் கொண்டிருந்த போதும், சைவ மரபில் சிவத்தலங்களில் ஓதம்பெறும் பஞ்ச புராணத்தில் இத்திருமுறைப் பதிகமும் உள்ளடங்கியுள்ளது இத்திருமுறைக்கேயுரிய தனிப்பெறும் சிறப்பம்சமாகும் எனலாம். பண்டை காலந்தொட்டு இன்றளவும் சிவநெறியாகிய தமிழ்நெறி உள்ளளவும் இத்திருமுறைப் பதிகங்கள் சைவ உலகுக்கு வழிகாட்டும் பெருஞ்செல்வங்களாகத் திகழ்வது உறுதியாகும்.

*அட்டவணை 1: திருவிசைப்பா ஆசிரியரும் பாடல் தொகையும்*

| ஆசிரியர் | திருப்பதிகம் | பாடல் எண் |
|---|---|---|
| *1. திருமாளிகைத் தேவர்* | *1. கோயில் - ஒளிவளர்விளக்கே* | *1 - 11* |
| | *2. கோயில் - உயர் கொடியாடை* | *12 - 22* |
| | *3. கோயில் - உறவாகிய யோகம்* | *23 - 34* |
| | *4. கோயில் - இணங்கிலா ஈசன்* | *35 - 45* |
| *2. சேந்தனார்* | *1. திருவீழிமிழலை* | *46 - 57* |
| | *2. திருவாவடுதுறை* | *58 - 68* |
| | *3. திருவிடைக்கழி* | *69 - 79* |
| *3. கருவூர்த்தேவர்* | *1. கோயில் - கணம் விரி* | *80 - 90* |
| | *2. திருக்களந்தை ஆதித்தேச்சரம்* | *91 - 100* |
| | *3. திருக்கழிக்கோட்டூர் மணியம்பலம்* | *101 - 111* |
| | *4. திருமுகத்தலை* | *112 - 121* |
| | *5. திரைலோக்கிய சுந்தரம்* | *122 - 132* |
| | *6. கங்கை கொண்ட சோளேச்சரம்* | *133 - 143* |
| | *7. திருப்பூணம்* | *144 - 151* |
| | *8. திருச்சாட்டியக்குடி* | *152 - 161* |
| | *9. தஞ்சை இராசராசேச்சரம்* | *162 - 172* |
| | *10. திருவிடைமருதூர்* | *173 - 182* |
| *4. பூந்துருத்திநம்பி காடநம்பி* | *1. திருவாரூர்* | *183 - 184* |
| | *2. கோயில் - முத்து வயிரமணி* | *185 - 194* |
| *5. கண்டராதித்தர்* | *1. கோயில் - மின்னார் உருவம்* | *195 - 204* |
| *6. வேணாட்டடிகள்* | *1. கோயில் - துச்சான* | *205 - 214* |
| *7. திருவாலியமுதனார்* | *1. கோயில் - பாதாதிகேசம்* | *215 - 225* |
| | *2. கோயில் - பவளமால்வரை* | *226 - 235* |
| | *3. கோயில் - அல்லாய்ப் பகலாய்* | *236 - 246* |
| | *4. கோயில் - கோலமலர்* | *247 - 256* |
| *8. புருடோத்தமநம்பி* | *1. கோயில் - வாரணி* | *257 - 267* |
| | *2. கோயில் - வானவர்கள்* | *268 - 278* |
| *9. சேதிராயர்* | *1. கோயில் - சேலுலாம்* | *279 - 288* |

**இறுதிக் குறிப்புகள்**

1. *கலைக்களஞ்சியம். 1956. தொகுதி 4. சென்னை: தமிழ் வளர்ச்சிக் கழகம், பக். 451.*
2. *தொல்காப்பியம். 1947. பொருளதிகாரம்: 85. சென்னை: நச்சினார்க்கினியர் உரை.*
3. *பாலசுப்பிரமணியன், சி. 1959. தமிழ் இலக்கிய வரலாறு. சென்னை: நறுமலர்ப் பதிப்பகம், பக். 75.*
4. *மேலது, பக். 77.*
5. *மேலது, பக். 110-111.*
6. *வரதராசன், மு. 1972. தமிழ் இலக்கிய வரலாறு. புது தில்லி: சாகித்திய அக்காதெமி, பக். 99.*
7. *பாலசுப்பிரமணியன், சி. 1959. தமிழ் இலக்கிய வரலாறு. பக். 140.*
8. *செந்துறை முத்து, 1995. திருமுறையும் தமிழிசையும். சென்னை: மணிவாசகர் பதிப்பகம், பக். 53-57.*
9. *செந்தமிழ்ச் செல்வி. பதிப்பாசிரியர்: மணி. திருநாவுக்கரசு முதல்யார். 1929-1930. ஏழாவது சிலம்பு. திருநெல்வேலி: தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் விலிடெட், பக். 67.*
10. *மேலது, ப.68.*
11. *அருணாசலம், பக். 1979. சைவ சமயம் (ஓர் அறிமுகம்). நாகர்கோயில்: 40-அ, வெள்ளாளர் காலனி மேற்கு இராமவர்மபுரம், பக். 1.*
12. *அப்பர் தேவாரம். ஆறாம் திருமுறை: 5. 1963. தருமபுரம் ஆதீனம். உரையுடன்.*
13. *சித்தலிங்கம், டி.பி. 1998. சைவ சமயத் தோற்றமும் வளர்ச்சியும். சென்னை: திருவரசு புத்தக நிலையம், பக். 29.*
14. *செந்துறை முத்து. 1995. திருமுறையும் தமிழிசையும், பக். 138.*
15. *சித்தலிங்கம், டி.பி. 1998. சைவ சமயத் தோற்றமும் வளர்ச்சியும். பக். 29.*
16. *வெள்ளைவாரணன், க. 1962. பன்னிரு திருமுறை வரலாறு. முதற் பகுதி. சென்னை: அண்ணாமலைப் பல்கலைக் கழகம், பக். 3-4.*
17. *மேலது, பக். 6.*
18. *நாராயண வேலுப்பிள்ளை, எம். 1998. சைவத் திருமுறைகளும் சித்தாந்த சாஸ்த்திரங்களும். சென்னை: முல்லை நிலையம், பக். 26.*
19. *வாழ்வியற் களஞ்சியம். 1988. தொகுதி 10. தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக் கழகம், பக். 513-514.*
20. *இரத்தினசபாபதி, வை. 1991. திருமுறைப் பெருமை. தஞ்சாவூர்: தொகுப்பியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், பக். 1.*
21. *செந்துறை முத்து. 1985. திருமுறையும் திருக்கோயில்களும். சிதம்பரம்: மணிவாசகர் பதிப்பகம், பக். 11-13; நாராயண வேலுப்பிள்ளை, எம். 1998. சைவத் திருமுறைகளும் சித்தாந்த சாஸ்திரங்களும், பக். 24-25.*
22. *வெள்ளைவாரணன், க. 1969. பன்னிரு திருமுறை வரலாறு. இரண்டாம் பகுதி, சென்னை: அண்ணாமலைப் பல்கலைக் கழகம், பக். 347.*
23. *வெள்ளைவாரணன், க. 1969. பன்னிரு திருமுறை வரலாறு. இரண்டாம் பகுதி, பக். 348; பன்னிரு திருமுறைகள். ஒன்பதாம் திருமுறை. வித்வான் எம். நாராயண வேலுப்பிள்ளை உரை. 1995. சென்னை: தமிழ் நிலையம், பக். 27.*
24. *வெள்ளைவாரணன், க. 1969. பன்னிரு திருமுறை வரலாறு. இரண்டாம் பகுதி, பக். 348.*
25. *சித்தாந்தம். 1934. மலர் 7. சென்னை: சைவசித்தாந்த மகா சமாஜத்தின் மாதத் தமிழ்ப் பத்திரிகை, பக். 71.*
26. *மேலது, 1953. மலர் 26, ப. 419.*
27. *செந்தமிழ் செல்வி. 1931-1932. ஒன்பதாவது சிலம்பு, ப. 570.*
28. *பன்னிரு திருமுறைகள். ஒன்பதாம் திருமுறை. வித்வான் எம். நாராயண வேலுப்பிள்ளை உரை. 1995, பக். 37.*
29. *அருணாசலம், மு. 1974. ஒன்பதாம் திருமுறை திருவிசைப்பா திருப்பல்லாண்டு (பாவும் பயின்ற நிலையும்). சென்னை: சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு, பக். 17.*
30. *சித்தாந்தம். 1952. மலர் 25, பக். 218.*
31. *வெள்ளைவாரணன், க. 1969. பன்னிரு திருமுறை வரலாறு. இரண்டாம் பகுதி. பக். 348.*

32. மேலது, பக். 374.
33. அருணாசலம், மு. 1974. ஒன்பதாம் திருமுறை திருவிசைப்பா திருப்பல்லாண்டு (பாவும் பயின்ற நிலையும்), பக். 12.
34. மேலது, பக். 14.
35. மேலது, பக். 15.
36. திருக்கோவையார் (எட்டாம் திருமுறை), திருவிசைப்பா, திருப்பல்லாண்டு (ஒன்பதாம் திருமுறை). அ. சோமசுந்தரம் செட்டியாரின் அரும்பொருள் விளக்கவுரை. 1999. சென்னை: கங்கை புத்தக நிலையம், பக். iv-v.
37. வெள்ளைவாரணன், க. 1969. பன்னிரு திருமுறை வரலாறு. இரண்டாம் பகுதி. பக். 349.
38. மேலது, பக். 349.
39. மேலது, பக். 350.
40. அருணாசலம், மு. 1974. ஒன்பதாம் திருமுறை திருவிசைப்பா திருப்பல்லாண்டு (பாவும் பயின்ற நிலையும்), பக். 18.
41. சித்தாந்தம். 1953. மலர் 26, பக். 418.
42. வெள்ளைவாரணன், க. 1969. பன்னிரு திருமுறை வரலாறு. இரண்டாம் பகுதி. பக். 350.
43. மேலது, பக். 19-20.
44. மேலது, பக். 20.
45. செந்துறை முத்து. 1985. திருமுறையும் திருக்கோயில்களும், பக். 90.
46. அருணாசலம், மு. 1974. ஒன்பதாம் திருமுறை திருவிசைப்பா திருப்பல்லாண்டு (பாவும் பயின்ற நிலையும்), பக். 20-21.
47. திருக்கோவையார் (எட்டாம் திருமுறை), திருவிசைப்பா, திருப்பல்லாண்டு (ஒன்பதாம் திருமுறை). அ. சோமசுந்தரம் செட்டியாரின் அரும்பொருள் விளக்கவுரை. 1999, பக் viii-xii.

மேற்கோள் நூல்கள்

கலைக்களஞ்சியம். 1956. தொகுதி 4. சென்னை: தமிழ் வளர்ச்சிக் கழகம்.

தொல்காப்பியம். 1947. பொருளதிகாரம்: 85. சென்னை: நச்சினார்க்கினியர் உரை.

பாலசுப்பிரமணியன், சி. 1959. தமிழ் இலக்கிய வரலாறு. சென்னை: நறுமலர்ப் பதிப்பகம்.

வரதராசன், மு. 1972. தமிழ் இலக்கிய வரலாறு. புது தில்லி: சாகித்திய அக்காதெமி.

செந்துறை முத்து, 1995. திருமுறையும் தமிழிசையும். சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.

செந்தமிழ்ச் செல்வி. பதிப்பாசிரியர்: மணி. திருநாவுக்கரசு முதல்யார். திருநெல்வேலி: தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் விலிடெட். 1929-1930. ஏழாவது சிலம்பு. 1931 - 1932.

அருணாசலம், ப. 1979. சைவ சமயம் (ஓர் அறிமுகம்). நாகர்கோயில்: 40-அ, வெள்ளாளர் காலனி மேற்கு இராமவர்மபுரம்.

அப்பர் தேவாரம். ஆறாம் திருமுறை: 5. 1963. தருமபுரம் ஆதீனம். உரையுடன்.

சித்தலிங்கம், டி பி. 1998. சைவ சமயத் தோற்றமும் வளர்ச்சியும். சென்னை: திருவரசு புத்தக நிலையம்.

வெள்ளைவாரணன், க. 1962. பன்னிரு திருமுறை வரலாறு. முதற் பகுதி. சென்னை: அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

நாராயண வேலுப்பிள்ளை, எம். 1998. சைவத் திருமுறைகளும் சித்தாந்த சாஸ்த்திரங்களும். சென்னை: முல்லை நிலையம்.

வாழ்வியற் களஞ்சியம். 1988. தொகுதி 10. தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.

இரத்தினசபாபதி, வை. 1991. திருமுறைப் பெருமை. தஞ்சாவூர்: தொகுப்பியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம்.

செந்துறை முத்து. 1985. திருமுறையும் திருக்கோயில்களும். சிதம்பரம்: மணிவாசகர் பதிப்பகம்.

பன்னிரு திருமுறைகள். ஒன்பதாம் திருமுறை. வித்வான் எம். நாராயண வேலுப்பிள்ளை உரை. 1995. சென்னை: தமிழ் நிலையம்.

சித்தாந்தம், சென்னை: சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் மாதத் தமிழ்ப் பத்திரிகை. 1934; மலர் 7; 1952: மலர் 25; 1953: மலர் 26.

அருணாசலம், மு. 1974. ஒன்பதாம் திருமுறை திருவிசைப்பா திருப்பல்லாண்டு (பாவும் பயின்ற நிலையும்). சென்னை: சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு.

திருக்கோவையார் (எட்டாம் திருமுறை), திருவிசைப்பா, திருப்பல்லாண்டு (ஒன்பதாம் திருமுறை). அ. சோமசுந்தரம் செட்டியாரின் அரும்பொருள் விளக்கவுரை. 1999. சென்னை: கங்கை புத்தக நிலையம்.

1அருணாசலம், ப. 2002. பக்தி இலக்கியம் ஓர் அறிமுகம். சென்னை: முல்லை நிலையம்.

கந்தசாமி, சோ. ந. 1993. திருமுறை இலக்கியம். சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.